செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. உ வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

இந்து சாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 1

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

புத்-௮௰] யாழ்ப்பாணம்:- கீலக ௵ ஆவணி ௴ எ உ வெள்ளிக்கிழமை (23-8-1968) [இல-௨

உ
சிவமயம்

திருச்செந்தூர்ப் புராணம்

(உரையுடன்)

எழுத்துஞ் சொல்லும் பொருளு மிணங்குற
வழுத்துஞ் சீர்ச்செயந் திப்பதி மான்மியம்
விழுத்த குந்தமி ழாற்சொல வேதமே
பழுத்த குஞ்சரன் பாதங்கள் போற்றுவாம்.

முருகப்பெருமானின் திருவருளைப் பெற்று நாம் உய்வதற்குப் பேருபகாரமான தலைசிறந்த புராணங்களுள் திருச்செந்தூர்ப் புராணமும் ஒன்றாகும்.

திருவவதாரம், வள்ளியம்மை திருவவதாரம், வள்ளியம்மை திருக்கலியாணம், பிரமாவிற்கு வரங்கொடுத்தமை, விசுவரூபம், பலகதை உபதேசித்தமை முதலிய கஅ (18) அத்தியாயங்களையும் அகூஉ (892) திருவிருத்தங்களையும் சொற்சுவை, பொருட்சுவை பத்திச்சுவை என்பன குன்றாதுடையது இப் புராண நூல்.

இவ் வரும் பெரும் நூல் கசு0எ - ஆம் (1907) ஆண்டிலே யாழ். சைவபரிபாலனசபைப் பிரசுரமாக உரையுடன் வெளிவந்துள்ளது.

காலத்திற்குக் காலம் சைவ அன்பர்கள் இவ்வரிய நூலை மீண்டும் அச்சிட்டு உதவ வேண்டும என வேண்டிக் கொண்டதற்கிணங்க இப்பொழுது ஷை நூலை அச்சிடத் திருவருள் துணை புரிகின்றது.

ஒரு குறிப்பிட்ட அளவு பிரதிகளே அச்சிடப்பட விருக்கின்றன. ஆகவே சைவ அன்பர்கள, முருக பக்தர்கள் தேவாலய கர்த்தாக்கள் முதலிய யாவரும் தத்தமக்கு வேண்டிய பிரதிகளின் தொகையினை எமக்குத் தெரிவித்து உடனே பதிவு செய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரதி ஒன்றின் விலை: ரூபா 5-00.

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை,
யாழ்ப்பாணம். 20-8-86

மு மயில்வாகனம்,
கௌரவ அதிபர்

திருந்துதேவன்குடி யீச்சரம்

பெருஞ்சாந்திவிழா

விளக்கக் கட்டுரை

"சிவநெறிச் செம்மல்" சொ. சம்பந்ததேசிகர் அவர்கள்
(இந்துசமயப் பிரசாரகர் திருவிடைமருதூர் தமிழ்நாடு)

இத்தலம் தென்னிந்தியாவில் சென்னை — தஞ்சை பெருஞ்சாலையில் லோயர் அணைக்கட்டு என்னும் கொள்ளிடத்தின் அணையின் 1½ கல் தொலையில் தெறகில் இருக்கிறது. இவ்வழியாக அரசினர் பேருந்து செல்கிறது சென்னைக்கும் தஞ்சைக்குமாக, புகைவண்டியில் வந்தால் சென்னை - தனுஷ்கோடி மார்க்கத்தில் மாயூரம் சந்திப்பிற்கு மேற்கே ஆடுதுறை என்னும் ஊரில் இறங்க வேண்டும். இவ்வூரின் மேல்பால் மண்ணியாறு என்னும் சுப்பிரமண்ணியநதி ஓடுகிறது. நானகுபுரமும் கழனிகள், பொய்கைகள், இஞ்சி, மஞ்சள, மா, பலா, வாழை கரும்பு, புஷ்பத்தோட்டங்கள் முதலியவைகளால் சூழப்பெற்று இயற்கை அன்னை எழில் நலம் காட்டும் பேரூர்.

இவ்வூருக்கு மேல்பால் சண்டிகேஸ்வர நாயனார் அருள்பெற்ற ஆப்பாடியும், தெற்கில் திருமங்கலக்குடி என்னும் அப்பர் சுவாமிகள் அருட்பாடல் பெற்ற தலமும், கீழ்பால்கின்ற எம்பசுபதியார் கோயில் கொண்டுள்ள

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மழுவாள்வலனேந்திமறை
யோதீ மங்கை பங்கா
தொழுவா ரவர் துயராயின
தீர்ந்தலுன தொழிலே
செழுவார் பெண்ணைத்
தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அழகாவுனக்காளாயினி
யல்லேனெனலாமே.

திருச்சிற்றம்பலம்
-சுந்தரமூர்த்திசுவாமிகள்.

நாவலர் நல்வாக்கு

சூதாடலானது ஒன்றினை முன் பெற்று இன்னும் பெறுவேன் என்னும் கருததால் நாமறினை இழந்து வறியன் ஆதற்கு ஏதுவாம். ஆதலால், அதனை ஒரு ஒரு பொழுதும் நினைத்தலும் செய்யாதொழி.

நினைவுத் திரையில்:

விக்கினேஸ்வர பூசை மகிமை

வல்லாளனுக்கு அருள் புரிந்த வல்லபை நாயகன்

அவனைத் துதித்தால்
அனைத்தும் ஜெயமாம்

(27-8-68) சஷ்வாய்
விநாயகர் சஷ்டி விரதம்

சைவ மக்களிற் சிலர் பிள்ளையார் பூசை தினந்தோறும் செய்த பிறகே போசனம் செய்யும் நியம முடையவர். விநாயகர் பூசை செய்தமையாற்சிறப்புற்றவருள் வல்லாளன் என்னுஞ் சிறுவனும் ஒருவன. இவன ஓர் செட்டிப் பிள்ளை. சிறு வயதிலேயே பூர்வ புண்ணிய வசத்தால விநாயகர் பூசையைச் சமீபத்திலுள்ள காட்டைச் சேர்ந்த மரததினடியில பல சிறுவர்களைச் சேர்ததுகொண்டு செய்வானுனன் ஒருநாள் இவன அழைத்துச் சென்ற தோழர்கள் வீட்டிற்குத் திரும்பாமையால அப் பிள்ளைகளின் தாய் தந்தையர் வல்லாளனுடைய தகப்பனிடம் முறையிட்டு வல்லாளனைப் பழித்தனர். வல்லாளனுடைய தகப்பன உடனே காட்டிற்குச் சென்று அவன் அமைத்துப் பூசித்த விநாயகமூர்த்தம மற்ற உபகரணங்கள்முதலியவற்றைக் களைத்தெறிந்து வல்லாளனை

பகைவர்க்கும் அருள் பொழ

பரம் பொருள்

புலவர்சிகாமணி, பண்டிதர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவரஐய

விரிஞ்சமால் தேவராலும் வெலற்கரும் விறலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும் வேதவொழுக்கமும் பிறவுமாற்றி
அருஞ்சிறை யவர்க்குச் செய்த வவுணர்கோ னுவிகொள்வா
பரஞ்சுட ருருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

காணப்படும் இவ்வுலகம் விசித்திரமானது. மாய காரியமான பொருளும் விநோதமானது. யாவும் தோன் நின்று மறையுந் தன்மையும் அறிஞர் உணர்வர். அழிய தவர் பரம் பொருளாகிய ஒருவரே. தேவர், மனித அசுரர் என்பதாதி ஜீவர்கள் பிறந்த பயனை அருளு பரம் சோதி கைலாசபதி ஒருவரே! அப் பரம பாசாகர இறைவர் பொது மன்றுடிய புனிதர், ஆ மாக்கள் வினைக்கீடாக எடுத்த உடலால் இன்ப, து பங்களை அடைகின்றன. மனிதப் பிறப்பு விசேடமான உயிர் அழியாது; உடம்பு அழியும். "கையிற் புண்ணு குக் கண்ணாடி வேண்டுமா?" அசுரர்கள் சிவபெருமா டம் வரம்பெற்றுப் பின்பு தேவாதி தேவரையும் வெறு பர். தேவர்களை வருத்தும் கூட்டமான அசுரரையு அருள் பொழிந்து காக்குங் கலியுக வரதரைப்பற்றி சைவ சமய சீலர்கள் சிந்தித்து வந்திப்பது ஆன்மசுக பெறும் வழியாகும. காலந்தோறும் மக்களின் அறிவு செயலும் மாறுப கின்றன. பகைமை பூண்ட அசுர அழித்துப் பேரருள் பாலித்த முருகப்பெருமானின் அரு கையில் நெல்லிக் கனிபாக யாண்டுங் காணலாம்! உருவ திருமேனியுடன் ஆறு மாமுகமும பன்னிரு கையு ஞானப் பெருவேலும் கண்டாலே வினைவீடப் பேரின் ததும்பும. இது உண்மை! உண்மை!! முக்காலு உண்மை!!!

உண்மைச் சமயம் சைவமே என்பர் பெரியோர்

"பேயனை புறச்சமயப் பிணக்குநூல் வழியனைத்தும்
பிழையே யன்றி
வாயன்மை தெரிந்து சித்தாந்த வழிதேறிப்

(தொடர்ச்சி 2-ம் ஆம் பக்கம்)

வட மாநில சைவஇளைஞர் மாமன்றம்

ஷை மாமன்றத்தின் வருடாந்தக் கூட்டம் (30-8-68) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. (ந நி.)

மரத்திற் கட்டி யடித்து அப்படியே அவிழ்க்காமல் விட்டு ஊருக்குள வந்தான. கந்தை செய்த பாதகத்திற்காகமகன் அவனைக்குருடனாகும்படி சபித்தான

விநாயகர் அவனுக்கு(வல்லாளனுக்கு) வெளிப்பட்டு அருள புரிந்தார். தகப்பன தான் செய்த அபசாரத்தின் நிமித்தம் குருடு, செவிடு, ஊமை, தொழுநோய் ஆகிய துன்பங்களை எய்தினன். இச் சரிதம் சண்டேசுர நாயனார் சரித்திரத்தோடு ஒப்பிடத் தக்கது. வல்லாளன் வேதனை நீங்கி முத்தியடைந்த கதையின் விரிவை விநாயக புராணத்திற் காணலாம்.

வருடாந்த உற்சவ

சாந்தையர்மடம் - ஸ்ரீ க பக விநாயகர் கோவில் வ டாந்த உற்சவம் 27-8-68 ஆரம்பமாகி 6-9-68 - இ நிறைவுறும. இக் காலங் ளில் மாலை 6½ மணி முத நல்லை ஞானசம்பந்த ஆதீ கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநா த பிரான் அவர்கள் "கந்த கருணை" என்னும் பொரு பற்றி விரிவுரை நிகழ்த் வார் 6-9-68 காலை மக சங்காபிஷேகம திருவூஞ்ச என்பன நடைபெறும்.

இதனால் விநாயகர் பூசை யின் மகிமையை ஒருவா அறியலாம்.

திருவாக்குஞ் செய்கருமங்
கைகூட்டுஞ் செஞ்சொ
பெருவாக்கும் பீடும் பெருகும்
உருவாக்கு
ஆதலால் வானோருமானை
முகத்தானை
காதலாற் கூப்புவர் தங் கை

(செ. வே. சம்புலிங்கம்பிள்ளை
விய ௵ ஆடி ௴ உ
(1946) இந்துசாதனம் இ
ழில் வெளி வந்த கட்டுரை

இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

கீலக ளு ஆவணி மீ எ-உ வெள்ளிக்கிழமை [1968]

நல்லைக் கந்தனும் தவவாழ்வும்

நல்லைக் கந்த சுவாமியாருடைய வருடாந்த உற்சவம் நாளையுடன் பூர்த்தியாகின்றது. சென்ற இருபத்தைந்து தினங்களிலும் சிறப்பாக யாழ்ப்பாண நகரும் பொதுவாக வடமாகாணத்தின் ஏனைய இடங்களும் தெய்வ உலகமாகக் காட்சியளித்தன. மக்கள் வீடு வாயில்களைச் சுத்தம்செய்து சாணநீர் தெளித்துப் புனிதமாக வைத்திருந்தனர். வீதிகளும் தினமும் துப்புரவு செய்யப் பெற்றன. நல்லூர்க் கந்தனுடைய உற்சவத்தைத் தரிசனஞ் செய்யப் பகற்பொழுதில் செல்லும் மக்கள் வெயிலுக்காறவும் தாகசாந்தி செய்துகொள்ளவும் அழகான தண்ணீர்ப் பந்தர்கள் நல்லூருக்குச் செல்லும் வீதிகளில் அமைக்கப்பட்டன. மாமிசம் புசிப்போர் மாமிச வுணவைத் தவிர்த்துச் சுத்த சைவ உணவை யருந்தினர்.

உற்சவம் முடிந்தபின்பு பெரும் பாலாருடைய வாழ்க்கை பழைய முறையில் நிகழும். மாமிசவுணவு மது அருந்துதல் முதலிய தீய பழக்கங்களையவர்கள் தவிர்த்தல், தெய்வ அநுக்கிரகத்தை அடைவதற்கு உகந்ததென்பது இதனால் நன்கு விளங்குகின்றது. ஆகையினால் அவ்விதமான வாழ்க்கையை நாம் எப்பொழுதும் நடத்துதல்வேண்டும். நல்ல கருமத்தை எப்பொழுதும் புரிய நாம் ஆயத்தமாக விருத்தல வேண்டும். இளமை, செல்வம், யாக்கை நீடித்தவையல்ல. நமக்கு மரணம் எப்போ வருமென்பது தெரியாது. நேற்று உயிருடன் இருந்தவன் இன்று இல்லையென்று கூறும் பெருமையையுடையது இவ்வுலகம்.

நல்லூர் கந்தனுடைய உற்சவம் யாவருக்கும் தவ வாழ்க்கையை வற்புறுத்து கின்றது. உற்சவகாலங்களில் அடியார்கள் பலவிதமான முறைகளில் தங்கள் வழிபாட்டைப் புரிகின்றார்கள். சில அடியார்கள் விரதம் அநுட்டிக்கின்றார்கள். சில ஆண்கள் அங்கப்பிரதக்ஷணமும், பெண்கள் அடியழித்தலும் செய்கின்றார்கள். சில அடியார்கள் காவடி யெடுக்கின்றார்கள், சில அடியார்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றார்கள். சில அடியார்கள் திருமுறை, கந்தரலங்காரம், கந்தரனுபூதி. திருப்புகழ் முதலிய பக்திப்பாடலை ஓதுகின்றார்கள். இவ்விதமான தொண்டுகளினால் அடியார்கள் கருவிகரணங்கள் சிவத்தன்மை யடைகின்றன. அவர்களுடைய உள்ளத்திலே முருகன் கோயில் கொண்டருளுவன்.

முருகன் தவவாழ்க்கை யநுட்டிக்கின்ற அடியார்களைத் தீயவழியில் செல்லாமல் நன்னெறியொழுகச் செய்வான். அவர்கள் முருகப் பெருமானுடைய அடியார்களாக இடையறாத பேரன்புடன் வாழ்வார்கள் உடல் விட்டபின் முருகன் திருவடியை யடைவார்கள்.

புன்னெறிய தனிற்செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சிநல்கி
யென்னையு மடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

சந்நிதி கந்தன் கோவிலுக்கு விதி பசனை

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சந்நிதி திருவிழாவில் கலந்துகொள்ளும் பசனைப் பாத யாத்திரைக் குழுவொன்று 24-8-68 மாலை புறப்படும் (ந நி)

x x x

ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் தலைமையில் விதிபசனை

நல்லை. ஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து நல்லைக் கந்தன் கோவில் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 5 மணிக்கு கோவில் சென்று ஆதீனம் திரும்பும் வீதிபசனை 24-8-68பூங்காவனத்தன்றுடன் நிறைவுறும்.

உ
வெளிவந்துவிட்டது!
ஓர் விஞ்ஞானப் பட்டதாரி
எழுதிய
திருமந்திர
ஆராய்ச்சி
(ஆங்கிலம்)
விலை : ரூபா 5-00

தொகையாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்,
சைவப்பிரகாசஅச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்

அரியாலை கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயில்

பழம் பெருமையும் பல அற்புதங்களும் வாய்ந்த இத் திருக்கோவிலுக்கென புதிதாக ஆக்கப் பெற்ற விநாயகப்பெருமானின் (எழுந்தளி) உற்சவத் திருமூர்த்த விக்கிரகம் எதிரேவரும் (ஆவணி மீ கூ-ந் உ) 23-8-68 ஞாயிற்றுக்கிழமை யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி பேச்சியம்பாள் கோவிலிலிருந்து திருவீதி ஊர்வலமாக மாலை 6-30 மணியளவில் மங்கலவாத்தியம் முழங்க, பசனை பாதயாத்திரையுடன் எடுத்துச் செல்லப் பெறும். இத் திருவிழா வைபவத்தில் யாழ் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரது திருமுறைப் பசனை திருவீதி ஊர்வலத்திலும் கோவிலிலும நிகழவிருக்கிறது

இக்கோயிற் றிருப் பணிகள் நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்துவருகின்றது. வேதசிவாகம ஒழுங்குமுறைகளைக் கைக்கொண்டு இங்கு விழாக்கள் நிகழ்வது குறிப்பிடத்தக்கதாகும். (ந. நி)

தமிழிசைவிழா

யாழ்ப்பாணத்தில் விளங்கும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தினது 9-ஆவது தமிழிசைப் பெருவிழா நல்லூரில் பெருந் திருவிழாவாக நிகழவிருக்கிறது எதிர்வரும், (புரட்டாதி) 6 7 8. 9, 10, 11-9-68 தேதிகளில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் கோலாகலமாக, இவ் விழாவை நடாத்துதற்குப் பல இசையறிஞர்களும், வித்துவான்களும், அபிமான அன்பர்களும் முன்வந்துள்ளனர். 11-9-68-ல் குழந்தைகள் விழா நிகழவிருக்கிறது. நல்லை முருகன்விழாவை யடுத்து இவ்விழா அமைவதால், இதுவுமோர்பெருந்திருவிழாவாக அமையும் என்பதற்கையமில்லை. யாழ் - அண்ணாமலை இசைக்கலை மன்றத்தினர் இசைத்துறைக்கும் தமிழ்க்கலைக்கும் ஆற்றும் ஈடு இணையற்ற தொண்டுகளை அறியாதவர் இலர் எனலாம். கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டு விழாவும் இசை அபிமான அன்பர்களுக்கு ஒரு பெரும விருந்தாக அமையுமென்பதை மகிழ்வுடன் தெரிவித்து வைக்கின்றோம். தெய்வத்தமிழுக்கும் தமிழ்க்கலைக்கும் இம்மன்றம் மேலும் மேலும் பணியாற்றிவரத் திருவருள் துணை புரிவதாக பெரும் இலட்சிய இலக்குடன் பணியாற்றும் இம்மன்றம் வாழ்க — வாழ்க — வாழ்க.

(நாயன்மார்கட்டு நிருபர்)

திருவருள் செய்யுமரசே

— "அருட்கவி சீ. வி." —

சுந்தர மிருந்தகர மீராறும் சிவஞானச்
சுடர்வீசு வதன மாறும்
தோகைமிகு முல்லாச மயிலோடு சேவலும்
சோதிதரும் வெற்றி வேலும்
மந்திரம் பயில்கின்ற மதுரநகைச் செவ்வாயும்
வண்குழை திகழ் செவிகளும்
வரிசைதரு மூவாறு விழிகளும் வெண்ணீறு
மன்னுபொற் றிரு மேனியும்
சந்தனம் தோய்ந்தமணி மாலைகள் புரள்கின்ற
தடமார்பும் கோடி கோடி
தபனின் கதிர்வீசு திருமுடிகளும் செல்வத்
தாளிணையும் கண்டுன் அடியார்
சிந்தையிருள் நீத்தின்ப மூந்துபர வாழ்வுபெறத்
திருவருள் செய்யு மரசே!
சீரான வேலோடு தெய்வகுஞ்சரி வள்ளி
திருமருங் கழகு செய்யச்
சித்திரப் பொற்பதும ரத்ன ரதமேறிவரும்
செல்வ நல்லூர்க் கந்தனே.

நாவலர் சொற் கேளீர்

சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த முதனூல்கள் எவை?

வேதம் சிவாகமம் என்னுமிரண்டுமாம்.

(சைவவினாவிடை முதற் புத்தகம்)

பகைவர்க்கும் அருள் பொழியும்

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போயண்மித் திருநீறுமைந்தெழுத்தும் கண்டிகையும்
பொருளாகக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வு
நான் பெற்றேனால் ? "

என்று கூறும் அரும்பொருளைச் சிந்தித்தால் சமயப்பூசல் நிகழாது.

ஆருட் சோதிப் பேரருட் கதிர்காம மாட்சி கூறவும் படுமோ? "சரியையாளர்க்கும் கிரியையாளர்க்கும் சகல யோகியார்க்கும் எட்ட வரிதான குமரநாயகன் அடியாருக்குத் தெவிட்டாத் தீந்தமிழ் பாடக்கேட்டுத் திருவுளம இரங்கிப் பொழியுஞ் செல்வியை உண்மைச் சைவ சமயிகளன்றிப் புத்த சமயிகள், அந்நிய நாட்டு வேறு சமயிகள் ஆகிய யாவரும் பெற்றுப் போற்றும் தென்றமிழ்த் தெய்வம் குமரநாயகனன்றோ! பகைவனாக எதிர்த்த சூரன் உள்ளம் உருகிக் கூறுகின்றான்.

ஆயிரகோடி காமரழகெலாந்தி ரண்டோன்றாகி
மேயினவெனினும சேயோன் விமலமாஞ் சரணந்தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றாது என்றிடில் இணையதோல்லோன்
மாயிரு வடிவிற்கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்!

என்றும்,

"விண்ணோர் நாயகன் வடிவங் கண்டேன் நற்றவப் பயனீதன்றோ" என்றும் கூறுவதை நோக்கவேண்டும். பகையைத் திருவுளங் கொளாது முருகன் பொழிந்த கருணை சைவ நற்சீலத்தோர்க்கமுண்டு "மாயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்" என்பர். நாமும் நல்லூரை நாடிக் கூடிப் புகழ்ந்து பாடி ஆடி வீழ்ந்து வணங்கிப் பிறவிப் பெரும் பயனை அடைவது நலம்.

கதிர்காம சுவாமி நல்லூரிலும் கருணை பொழிகின்றார். நல்லூரைத் தரிசிப்பதைப் போலப் பெரும் பயன் எங்கே கிடைக்கும்? யோகர் சுவாமிகள் அருளும் திருவாக்கைப் பாருங்கள்!

"வேதாந்த சித்தாந்தம் கற்றதனால் என்ன? வேடிக்கை கதைகள், பேசினால் என்ன? வீதியில் வந்தோருக்கால் விழுந்து கும்பிட்டால் வில்லங்கமெல்லாம் இல்லாமற் போமே"

நற்சிந்தனை)

கதிர்காமத் திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரியசெவ்வேள்
செய்யபேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.

சுபம்.

முருகனருள் வாழ்க!

திருத்தாடகையீச்சரம் பெருஞ் சாந்திவிழா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திருப்பனந்தாள் நல்லூர் என்னும் திருத்தலமும் இருக்கிறது இத்தலத்தின் பெருமை மேலும் விளங்குவதாக இத்தலத்தில் பனங்காடுகள் நிறைவாக இருக்கிறது. இவ்வூர் இப்பொழுது திருப்பனந்தாள் எனவே வழங்குகிறது.

இத் தலத்தில்தான் தருமை ஆதீன குரவரான மாசிலாமணி பண்டார சன்னிதி அவர்களின் நல்லுபதேசம் பெற்று தமிழ்க் கடலாகவும், முனிபுங்கவராகவும் விளங்கிய குமரகுருபரசுவாமிகள் திருமடாலயம் இருக்கிறது முதல்வரைப்போலவே விளங்கும் திருவார் திரு அருணந்தி சுவாமிகளும், இளவரசு தவத் திரு முத்துக்குமாரசுவாமிகளும் இமயம் முதல் குமரிவரை, செந்தமிழும், சைவ சமயமும். சாத்திரமும் வளர கா பல அமைத்தும், குளம் பல தொட்டும், அறச்சாலைகள் பலவும்ஆக தமது பணியைச் சிறக்கச் செய்துவருகிற பெருந் துறவிகள் வாழ்ந்து வரும் திருப்பதி.

திருக்கோயில் அமைப்பு: கோயில் மேற்கு நோக்கிய சந்நிதி, சுவாமி பெயர் அருணஜடேஸ்வரர், அம்மையின் பெயர் பெரியநாயகி, எழுநிலை மாடம் உடைய பெருங்கோபுரம் அழகும் வனப்பும் உயர வானோங்கி நிற்கிறது. இதை அடுத்து உள் நுழைந்தால், அறங்கூறும் மண்டபம் எதிரில் வடபால் பெரிய ஐம்பெருங் கடவுள்களுக்கு அலங்கார மண்டபம், தென்பால் தேவஸ்தான காரியாலயம், மண்டபத்திற்கு எதிரே பெரிய துவஜஸ்தம்பம், பலிபீடம், அழகான நந்திகோவில் இதை அடுத்து பக்கலிலே நாகதீர்த்தம் என்னும் நல்ல நீர் உடைய கட்டுக்கோப்பான தீர்த்தம், வெளிச்சுற்றுப் பெரிய பிரகாரம் இதில் ஈசானபாகத்தில் யாகசாலை உளது. கட்டைக் கோபுரம் தாண்டி உள் நுழைந்தால் சித்திர மண்டபம், ஆடவல்லானின் ஐவகை நடனம், பஞ்ச பூதத்தலங்கள், காளியின் ஆவேச தாண்டவம் வெகு நேர்த்தியாகச் சித்திரிக்கப் பெற்றுள்ளது. அடுத்து நிருத்த மண்டபம், மகா மண்டபம், அபிஷேக மண்டபம், நேரே சென்றால் செஞ்சடையப்பர் திருச் சந்நிதானம் பெருமான் சுயம்பு மூர்த்தி சற்றே சாய்ந்தநிலையில் இருப்பார் அவரைத் தரிசித்துக்கொண்டு, வடபால் உட்சுற்றிற்குச் செல்ல முற்பட்டால் கிழக்கு நோக்கி அறுமுகனும், தெற்குநோக்கி ஆடவல்லானையும் கண்டு உருகி கிழக்கே சென்றால் கோஷ்ட மாடத்தில் துறகாதேவி காட்சி நல்குவாள், மேலே நோக்கினால் தாடகை பெருமானைப் பூசிக்கின்ற நிலையில் சிற்பம், ஈசானத்தில் கருவறையை ஒட்டி சண்டிகேஸ்வரர் ஆலயம், கருவறையின் கீழ்பால் மேல் நோக்கினால் குங்கிலியக்கலையர் பெருமானை நிமிர்த்தும் சிற்பம், தெற்குச் சுவரோரம் கல்யாண சுந்தரர், அறுபான்மும்மை நாயன்மார்கள் சிலாரூபமும் உற்சவ மூர்த்திகள் செப்புப் படிமமும் காசிவாசி அருணந்திசுவாமிகளால் நிறுவப்பெற்ற திருவாசகம் பொறித்த செப்பேடும் கண்டு மேற்கே வந்தால் சோமாஸ்கந்தரை வணங்கிக்கொண்டு வெளியேவந்தால் அழகான துவாரபாலகர், வடக்கு நோக்கிச் சிறிது சென்றால் அம்மையின் தனிக் கோயில் வலம்வந்து சந்நிதிசென்று வணங்கி எதிர் நோக்கினால் நாககூபம் என்னும் கிணறு எதிரே சென்றால் உட்சுற்றில் தொண்டுசெலலும். நவக்கிரகங்களை வணங்கிக்கொண்டு தெற்கே சிறிது சென்றால் செஞ்சடையப்பர் இரண்டு பனைமரத்தின் இடையில் தரிசனம் தருகிறார் ஆக்னேய திக்கில் மடைப்பள்ளி, தெற்குச்சுற்று நிருதிதிக்கில் விநாயகப் பெருமான் ஆலயம் எதிரே திருச்சுற்று மண்டபத்தில் சமய ஆச்சாரிய மூர்த்தி இவர்களை வழிபட்டு ஆலயத்தைவிட்டு வெளியேவந்து தெற்கே திருப்பினால் கட்டளைமடம் இருக்கிறது, இது யாத்ரீகர்கள் விடுதியாகவும் பயன் பெறுகிறது நாமும் அங்கே சென்று சற்றே தங்கி இறைவனின் அருட்டிறத்தைச் சிந்திக்கலா மல்லவா வாருங்கள் அங்கே போவோம்.

இத்தல வரலாறு: இது பண்டு தாலவனம் என்று வழங்கப்பெற்றது நாரதனது நல்லருளால் காட்டானையாகத் திரிந்த ஐராவதம் பெருமானைப் பூசித்துப் பழைய உருப்பெற்றுத் தனது பெயரால் திருக்கோயில் அமைத்து இருக்கிறது இக்கோயிலிற்கு ஐநடையப்பர் திருக்கோயில் என்று பெயர். சுவாமி பெயர் ஐராவதேசுவரர் என்பதாகும்.

மேலும் நாககன்னிகை ஒருத்தி பிலத்தின் வழியாக வந்து தன் பெயரால் தீர்த்தம் அமைத்து சுமதி என்ற பிராமணனை மணந்து இருந்து வழிபட்டு முத்தி அடைந்த திருத்தலம். இத்தலம் பனங்காடாக இருந்தது. தாடகை என்னும் அரக்க பக்தை பெருமானைப்பூசித்தாள். 16 கரம் உடையவள் பலநாள் பூசித்து வருகின்றபொழுது ஒரு நாள் பூசையின் முடிவில புஷ்பம் சாற்ற முற்படுகின்றபொழுது மேலாடை நெகிழ்ந்து புஷ்பம் சாற்ற இடர்ப்பட்டதைக் கண்ட செஞ்சடையப்பர் தான் சற்றே குனிந்து தானே ஏற்றுக்கொண்டு அவளுக்குக் காட்சியும் கொடுத்து பேராம் தில்லையைத் தந்து அப்படியே இருந்து விட்டார்,

(இராமாயணத்தில் வரும் தாடகையல்ல. இவள் வேறு)

இப்படிப் பலகாலம் ஆயிற்று பின்னே வந்த சோழன் ஒருவன் பெருமானை நேர்முகங்காண விழைந்து தான் அரசன் ஆணைப்படியால் உடன் பெருமானை நிமிர்த்த முற்படுகையில் ஆனை சேனை தன் அதிகாரம் எல்லாம் செலுத்தியும் நிமிர்த்த முடியாமை எண்ணி அரசன் மிக வருந்தினான். இதனைக் கேள்வியுற்ற திருக்கடவூரில் வாழ்ந்த மெய்யன்பர் குங்கிலியக்கலைய நாயனார் எனபார் திருப்பனந்தாள் வந்தார் அரசனைக் கண்டு அரசே நான் நிமிர்த்

சைவப்புலவர் பரீட்சைகள்

சைவ பரிபாலன சபை நடாத்தும் சைவப் புலவர் இளஞ் சைவப்புலவர் பரீட்சைகள் 29-8-68, 30-8-68, 31-8-68 ஆகிய மூன்று நாட்களிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம் 2-8-68.

க. கணபதிப்பிள்ளை
பரீட்சைக் காரியதரிசி.

யாழ்ப்பாணம்

—ஐக்கிய விபாநிதி—

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிருந் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்த ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகளை ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
எங்கள் காரியாலய மூ [illegible] அறிந்துகொள்ளலாம்.

— மனேஜர்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

Dr. கனகசபை மகள் கந்தையா பத்மாவதி காவலர் வீதி யாழ்ப்பாணம் —வழக்காளி

இல. எம் பி 6473 எதிராக

முருகேசு சோமசுந்தரம் நல்லூர் யாழ்ப்பாணம் -எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6473 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்பட்ட 1 துண்டுக் காணியை 1968-ம் ஆண்டு புரட்டாதி மாசம் 19-ம் திகதி (19-9-68) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5500/-ம் 6 3-64 தொடக்கம் 18-10-66 வரைக்கும் ரூபா 5000/- க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கு இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 321-07

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "கொல்லன்வளவு" நில. பர, 1 குளி 3 1/2 இது உத்தரவு பெற்ற உலாந்தா எஸ் தப்புவால் 10-11-57 ல் தயாரிக்கப்பட்ட 84 ம் இலக்கப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. வீடும் கிணறும் பயிர்வகைகளும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு கார்த்திகேசு தம்புவின் ஆதனம் மேற்கு கார்த்திகேசு தம்புவுக்கும் கார்த்திகேசு ஐயசதுரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு சண்முகம் செல்லப்பாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், பதிவு எண் D 283/ 91

19, சுவாமியார் வீதி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்,

சு. கந்தசாமி
கொம்மிஷனரும் விலைமதிப்பாளர்.
எம் 153 23—8—68

திருக்கோயில் உற்சவங்கள்

அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில், சிறுப்பிட்டி ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரியம்மாள் கோவில் வருடாந்த திருவிழாக்கள் 27-8-68 ல் ஆரம்பமாகின்றன.

செய்கிறேன் கவலற்க என்று சொல்லி இறைவன் திருமேனியில் ஒரு வடத்தின் முனையைப் பிணித்து, மற்றமுனையைத் தன் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு நிமிர்த்த முற்படச் சுருக்கு இறுக இறைவன் கருணை இளக அருள் சுரந்து நிமிர்ந்து நின்று அடியவர் அன்பை உலகிற்குக் காட்டினான் இறைவன். இவ்வளவு உயர்ந்த திருத்தலம் தருமை ஆதீனத்தின் ஆளுகைக்குட்பட்ட இருபத்தேழு தேவஸ்தானத்தில் ஒன்று. இதற்கு முன்னே இருந்து அருளாட்சி செய்தவர்கள் இப்படிப் பரக்கத் திருப்பணிகள் செய்து குட முழுக்காட்டியதாகத் தெரியவில்லை.

இப்பொழுது பீடத்தில் எழுந்தருளியுள்ள கயிலைக் குருமணி தவத்திரு சுப்ரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாணையின் வண்ணம் 5-7-68 கீலக ஆண்டு ஆனித்திங்கள் 22 ம் நாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 9-30 மணிக்கு பெரியகோபுரம். கட்டைக் கோபுரம், கற்பக்கிரகம் எல்லாம் செப்பமுறத் திருப்பணி செய்து வண்ணமிட்டு அருட்கோயிலாம் திருக்கோயிலை அலங்கரித்துச் செஞ்சடையப்பருக்கும், தையலாம் பெரிய நாயகிக்கும், பரிவாரங்களுக்கும் குடமுழுக்காட்டப் பெற்றது.

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

ஆவணி சதுர்த்தி

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 11உ (27-8-68) செவ்வாய்க்கிழமை விநாயக சதுர்த்தி விழா நடைபெறும் அன்று பெருமானுக்கு வெள்ளியில் புதிதாக அமைத்த திருவாசி அணியப்பெறும் அத்துடன் ஆசிரியை திருமதி ம. பத்மநாதன் அவர்களால் "விநாயகர் மகிமை" என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் செய்யப்பெறுவதுடன் பஜனையும் இடம்பெறும்.

இரதோற்சவம்

கீரிமலை [illegible] ஸ்ரீ சித்தி விநாயகப்பெருமான் கோயில் சதுர்த்தி இரதோற்சவ விழா 28-8-68 செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெறும்.

கும்பாபிஷேகம்

கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ அருணசலேஸ்வர சுவாமி கோயில் 4-9-68 புதன் கிழமை காலை 6-45-க்கு தூபி அபிஷேகமும் இரவு 6-30-க்கு திருக்கலியாண உற்சவமும் சிறப்பாகநடைபெறும். (நதி)

சமூகத்தொண்டன்

வட்டுக்கோட்டை முன்னாள் பா. உ. திரு. வி. வீரசிங்கம் அவர்களது உருவப்படம் 14-8-68 அன்று மாநகரசபை ஆணையாளர் திரு. கே. பேரம்பலம் அவர்களால் யாழ்ப்பாணம் நூல்நிலைய மண்டபத்தில் திரைநீக்கம் செய்யப்பட்டது. பெரியார் சிறந்த சமூகத் தொண்டனும், சமயத் தொண்டனுமாவர். நீண்டகாலம் அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையினது தலைவராகவும் கடமை புரிந்துள்ளார். மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பிரதம ஆசிரியராக நீண்டகாலம் கடமையாற்றியவர் தமது மரண சாதனத்தில் 10000 ரூபா வை நூல் நிலையத்துக்கு ஒதுக்கி வைத்தனர். அவருடைய உருவப் படத்தை இலங்கையின் தலைசிறந்த ஓவியர் கேற்முதலியார் அமரசேகரா அவர்கள் வரைந்து உதவினர். பேராசிரியர் கே குலரத்தினம் முதலிய பல பெரியோர்கள் திரு. வீரசிங்கம் அவர்களுடைய சேவைகளைப் பாராட்டினார்கள்.

ஈழத்தின்பெருமபுகழ்



பத்தர்: "ஆசிய கண்வங்கி"யை நம்ம ஈழத்திலே நிறுவுவதாக முடிவெடுத்திருக்காங்கண்ணே உருடர் ஒன்றுக்கு 200-க்கும் அதிகமான, புதுப்புதிய கண்களைத் தேவைப்படும் நாடுகளுக்கெல்லாம் வழங்கியிட்டிருக்காங்க! இது நமக்கெல்லாம் ஒரு பெருமையில்லையா......?

சித்தர்: 'பலே! பலே!' அப்பிடின்னு, யார்தான் மகிழமாட்டார்? ஆனால் இந்தவங்கியை யாழ்ப்பாணத்தில் நிறுவுவாங்களோ? அல்லது, வேறெங்காவது நிறுவுவாங்களோ! எப்படியாவது நல்லபடி ஆகட்டும் என வாழ்த்துவம். இந்த அரிய தானத்தை மக்களுக்கு இனிதுவிளக்கினால் ஈழம் பெரும் புகழைச் சம்பாதிக்கும்பாருங்க; அவமாக, அற்ப காரணங்களுக்கெல்லாம் தற்கொலை பண்ணித் தொலையும் மூடபுத்தி வரும் (அறிவற்ற) மக்கள் (அன்டவனளித்த) தங்களது கண் செல்வத்தை 'வங்கிக்கு வழங்கி' ஈழத்தின் புகழை உயர்த்த முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே!

!! தாயுன்மார் - நாதன்"

நாவலர் சிலை

வண்ணைநாவலர் பாடசாலை மண்டபத்தில் நீதியரசர் வி சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நாவலர் சபைக் கூட்டத்தில் நாவலர் சிலையை நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தெற்கு திருவீதியில் நிறுவுவதற்கு யோசினை கூறப்பட்டது.

அணிந்துரை அரங்கம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
சபையின் சார்பில்
மெய்கண்டான் அன்பளிப்பு

பலவர்ணங்களுடன் எழில் மிக்கு விளங்கும் நாவலர் திருவுருவப் படமும் நாவலர் பெருமானின் தொண்டினை விளக்கும் கட்டுரையொன்றும ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை உறுப்பினர்களின் நாமாவலியும் நோக்கங்களும் கொண்ட ஒரு வெளியீடு மெய்கண்டான் அச்சகத்தாரால் பிரசுரஞ் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு இலவசமாக நல்லைக் கந்தன் தேர்த் திருவிழாவிலன்று வழங்கப்பட்டது. எமக்கு அனுப்பப்பட்ட பிரதிக்காக மேற்படி அச்சக நிலையத்தாருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். —.—

திருத்தாடகையீச்சர

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததை பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு பெருமானுடைய பேரருளைப் பெற்றனர்.

குடமுழுக்கு விழாவை யொட்டி திருமுறையாராடு செவ்வனே நடந்தேறியது. நாட்டின் பலபகுதி அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

எழுபத்து இரண்டு திருமுறை வாணர்கள் இரவும், பகலும் இடைவிடாது அகண்ட பாராயணம் செய்தார்கள்.

இப்படியெல்லாம் நிகழ்ந்தேறிய திருவருள் வல்லபத்தைப் பாரோரெல்லாம் பயனடைய வேண்டும் என்னும் விருப்பத்தால் ஈழத்து மக்கள் இனிது திருவருள் பெற உழைத்து வரும் நல்லேடாம் இந்து சாதனத்திற்கு அடியேன் இக்கட்டுரையைத் தரலானேன். ஆகையால் நேரே பார்க்காவிட்டாலும் ஞானசம்பந்தப் பெருமான் பாடிப் பரவிஉள்ள தேவாரத்தைக் கீழேதந்துள்ளேன். கட்டுரையையும் படித்து பாடலைப்பாடிப் பரவும் அன்பர்களுக்கு அருண ஜடேஸ்வரப் பெருமான் எல்லாகலனும் பாலித்துத் திருவருள் சுரப்பான் என்பது திண்ணம்.

படிக்க, பாட, பரவுநாமே, வீடும், நல்லரசும், வாழ்க செஞ்சடை யப்பனை மனத்தால் பரவுவோமாக.

சுபம்.

ஒரு விண்ணப்பம்

"இந்துசாதனம்" தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளினது சந்தாதாரரைத் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றி செலுத்தும் வண்ணம் விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றோம், மனேஜர்.

கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

1. பொன்னம்பலம் ருசையாவும்
2. பெண் செல்லம், தையிட்டி காங்கேசன்துறை —வழக்காளிகள்

இல. M B 8726 எதிராக

1. இளையதம்பி ருசையாவும் பெண்
2. சின்னம்மா, தையிட்டி காங்கேசன்துறை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக்கோட்டின் M. B. 8726 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்கள் 1968-ஆம் ஆ. ஐப்பசி மாசம் 5-ந் திகதி (5-10-1968) சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் அவ்வக் காணிகளுள் வின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: வட்டியும் முதலுமாக ரூபா 2544/- இன்னும் 2544/- ரூபாவிற்கு 9-4-68 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்துவீத வட்டியும் செலவு ரூபா 467- 0 சதமும். (ஏற்பட்ட செலவு 314-55 வெலியாத்துச்செலவு 74-70 இனிமேல் ஏற்படுஞ் செலவு 78-45)

ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று தையிட்டியிறை "வத்திரவத்தை" கில லா. 30. நாலெல்லைகளும் பனைமரக்களும் எல்லை கிழக்கு கந்தையா பெண் சேதுப்பிள்ளையினுதனமும் மறுவும், சின்னப்புபெண் சிதம்பரத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள், வடக்குஅருணாசலம் பெண் நாகரத்தினத்திற்கும், C. பொன்னையாவிற்கும், C. முத்துப்பிள்ளைக்கும் V. சிற்றம்பலத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள். மேற்கு S. சின்னத்தங்கத்தினுதனம். தெற்கு A. விசுவருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், இதிற் சோரியலாய் ¼ பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி யிறை "தண்டலைப்பை" பர. கில. லா. 54 தற்பொழுது கில லா. 60. பனைகளும் வடலிகளும் எல்லை கிழக்கு கந்தர் பெண் சின்னச்சிக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். வடக்கு கணபதிப்பிள்ளை பெண் கண்மணிக்குரிய வாதனம், மேற்கு சின்னத்தம்பி வல்லிபுரத்திற்கும் சுப்பர் வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுரிய வாதனம் தெற்கு ரேட்டு, இதிற் சோரியலாய் 1/4 பங்குமதற்குரியவைகளும்.

3. மேற்படி யிறை "சவரன்" பர கில லா. 1½ பனைகளும் எல்லை கிழக்கு ரேட்டு, வடக்கு ஒழுங்கை, மேற்கு சின்னத்தம்பி பெண் செல்லத்தினுதனம், தெற்கு தம்பிப்பிள்ளை பெண் சின்னத்தங்கத்தினுதனம் இது முழுவதும்.

தா. க. பொன்னுத்துரை J. P.
'அ.இலகம்" கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்
28/1, யாழ்வீதி. யாழ்ப்பாணம். M 157 23-8-68
18—8—68.

கொமிசன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டிலே

இமையாணனிலிருக்கும் கதிரன் குளந்தையன் —வழக்காளி
இல. 9414 எதிராக
இமையாணனிலிருக்கும் பாலன் சின்னவன்
மனைவி நாகி இறந்தமையால் இவவுக்காக தத்துவகாரர்
இமையாணனிலிருக்கும் பாலன் சின்னவன் —எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1968-ம் ஆடு புரட்டாதி மீ 18ந உ புதன்கிழமை மூற்பகல் 10-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று. இமையான் குறிச்சியிலிருக்கும் தூபுலம் என்னு மாதனம் கில. பர. 23 இதில் கில. பர. 20 ஆட்சிப்படியும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி சதாசிவத்தினதும் சகோதரி, சகோதரனினதும் ஆதனம், வடக்கு சின்னத்தம்பி பெண் சிவப்பியினதும் மறுபேருடைய ஆதனம், மேற்கு தல்லையன் மயிலன். தில்லையன் மினுசியின் ஆதனம், தெற்கு குட்டியன் தம்பனதும் மறுபேருடைய ஆதனமும், இதில் முழுவதும், பனைகள் வடலிகள் தென்னைகள் மாமரங்கள் வேப்பமரங்கள் கிணறும் வேறும் இவ்வெல்லைகளுட்பட்டன யாவும், இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை ரூபா 8,000/-

தீர்வைத்தொகை	ரூபா	3,199-66
ரூபா 2000/- 20-12-66 தொடக்கம் 10-6-67 வரை வருஷம் ஒன்றுக்கு 8 வீத வட்டி		76-41
ரூபா 3,276-07 வட்டி 5 வீதம் 10-6-67 தொடக்கம் 3-7-68 வரை		166-00
கோட்டுச் செலவு (ரூபா 376 87½ — 225/-)		151-87
		3593-94
கொடுத்தது	ரூபா	1000-00
மிகுதி வருமதி		2,593-94

"சந்நிதி வேல்" கா. முத்துகுமாருஐயர்
பருத்தித்துறை. கொமிசனரும விலைமதிப்பாளரும்
Commissioner, Valuer & Licensed Auctioneer
15-8-68 எம் 154. 23-8-68

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் சீதாரி சப்பல்தெரு 9-ம் நம்பர் வீட்டில் அடைவு பிடிப்பவர்களாகிய யோசேப் அன் கோ அவர்களிடம் 1965-ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31-ஆம் திகதி தொடக்கம் 1967-ஆம் ஆண்டு பங்குனி மாதம் 31-ஆம் திகதி வரையில் வைக்கப்பட்டுத் தவணை தப்பிய அடைவு நகைகள் 1968-ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 28-ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி அளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இடாப்பு மேற்படி இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Konamalai Ayadurai
கோணமலை ஐயாத்துரை
யாழ்ப்பாணம். 7-8-68, வெத்தீஸ் மேஸ்தர்.
எம். 151, 16, 23, 30—8—68

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சாம்பன் இழக்கு மணவற்பபிள்ளை அந்தோனிப்பிள்ளை சம் பெண் சவரி ஆசரி துரைக்காகவும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 537-ம் இலக்க சுதந்தர வழக்கில் காளுசேரம அந்தோனிப்பிள்ளையின் தத்துவகாறிபாகவும் —வழக்காளி.
வழக்கு இல M B 8043 எதராக
சரவணை குமசாமி செல்லையாபிள்ளை எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8043 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1968 ம் ஆடு ஆவணி மீ 29-ம் உ (29-8-68) முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1795-38 சதமும் ரூபாய் 1000-த்துக்கு 10-3-66 தொடக்கம் 23-8-67 வரைக்கும 15 வீத வட்டியும அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 386-46 சதம். செலவு காசில் ரூபாய் 100/ — கொடுபட்டிருக்கிறது.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு ஊர்காவற்துறை கோயில்பற்று சரவணையிறை "பன்கன்ருஜசீமா, ருஜசீமா அடைப்பும் ருஜ சீமாவும்" பர நில இலா 3 - 0 குளி கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றுத் தண்ணீரில் பங்கு வழிவாடக்கால் தூர்வையில் பாவிப்புருத்தும். இதற்கெல்லை கிழக்கு வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய வாதனம், வடக்கு நாகலிங்கம் பெண் வள்ளியம்மைக்குரிய வாதனம். மேற்கு கார்த்திகேசு பசுபதிக்குரியவாதனம். தெற்கொழுங்கை, இதடங்கலும். இலக்கம் C 330/160 இன் கீழ் பதிவு செய்துள்ளது.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை ரோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
நல்லூர், யாழ்ப்பாணம், 30-6-68. M 155 23-8-68

கோட்டு விற்பனவு விளம்பரம்

C. T. S. மூர்த்தி வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை
வழக்காளி.
வழக்கு. இல. 4813 / A. எதிராக
1. வேலுப்பிள்ளை மகாதேவன் அராலி மேற்கு
2. அம்பலவாணர் சின்னையாவின் கைம்பெண் சிவக்கொழுந்து சண்டிலிப்பாய்
3. சின்னத்தம்பி தங்கராசா 81/6 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிக்குவெஸ்ற் கோட்டின் 4813/A இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளை 1968-ம் ஆடு புரட்டாதி மீ 23-ம் உ திங்கட்கிழமை மூற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல்வட்டி ரூபா 623/—, 27-7-65 தொடக்கம் 8-2-68 வரைக்கும் ரூபா 503/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 72/25 சதம்.

காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "புங்கன்குளி" நெற் பரப்பு 10, எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை பொன்னையாவும் கனகசபை கந்தப்புவின் ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை வைரவநாதரின் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி அம்பலவாணரின் உரிமையாளர்களின் ஆதனம் தெற்கு வேலுப்பிள்ளை கந்தையாவின் ஆதனம்.

(2) மேற்படி வட்டுக்கோட்டை மேற்கிறை "குசலானை" நெற்பரப்பு 14 எல்லை கிழக்கு குமாரசாமி பெண் ஆச்சிப்பிள்ளையின் உரிமையாளர்களின் ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் கைம்பெண் இராசம்மாவினதும் ஆறுமுகம் சேதுபதியினதும் ஆதனம். மேற்கு கணபதிப்பிள்ளையின் கைம்பெண் நாகம்மாவினதும் ஆறுமுகம் முருகேசபிள்ளையினதும் கந்தையா சிதம்பரப்பிள்ளையினதும் உரிமையாளர்களின் ஆதனம். தெற்கு கந்தையா சுப்பிரமணியத்திற்கும் பங்காளர்களிற்குமுரிய ஆதனம்

22. ஆஸ்பத்திரி வீதி, வே. கோபாலபிள்ளை,
யாழ்ப்பாணம், 7-8-68. கொமிசனரும் விலைமதிப்பாளரும்
(எம். 156 23-8-68

வெந்திஸ்விற்பனவு அடைவுநகைகள்

தா. சி. குமாரசாமி 576/6, அம்மன்கோவில் ரோட்,
கலட்டி யாழ்ப்பாணம்.

மேற்படி அடைவு கடையில் 1966-ம் ஆண்டு சித்திரை முதலாந் திகதி (1-4-1966) தொடக்கம் 1967 பங்குனி 31-ந் திகதி (31-3-67) வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1968-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19 ந் திகதி (19-9-68) வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
"இராசகிரி" ஏல விற்பனவாளர்,
643. காங்கேசன்துறைவீதி, கொமிஷனரும். விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம் 17-8-68 M. 158, 23, 30, 8-9-68.

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானை தன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 23—8—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.